TNTAM / 2013 / 53818

# மகளிர் உரிமை

## MAGALIR URIMAI

மலர் : 11 இதழ் : 6 விலை : 10/- ஜூன் : 2024
Vol. : 11 Issue : 6 Price : 10/- June : 2024



## 3-முறையாக பிரதமர் மோடி பதவியேற்பு

# திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த வெற்றி 40/40



# கழகத் தலைவர்

அவர்களின் திராவிட மாடல்
ஆட்சிக்கு கிடைத்த வெற்றி
40/40



வாக்களித்த
தமிழக மக்களுக்கு
நன்றி! நன்றி!! நன்றி!!!

ஈகை

# க.கருணாகரன்



சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதி

கலைஞர் நகர் தெற்கு பகுதி தி.மு.க.

TNTAM / 2013 / 53818

# மகளிர் உரிமை

MAGALIR URIMAI

மலர் : 11 இதழ் : 6 விலை : 10/- ஜூன் : 2024

Vol. : 11 Issue : 6 Price : 10/- June : 2024

வெளியிடுபவர் :
**T.Kஅசோக்குமார்**
Email ID : Magalirurimai@gmail.com

இணை ஆசிரியர் :
திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

CEO :
**S.J.சூசைராஜ்**

துணை ஆசிரியர் :
**D.கிறிஸ்துராஜன், ஜீவமாணிக்கம்**
**A.சிவக்குமார், M.A.விஜய்**

ஆலோசகர்கள் :
**ஈகை.க.கருணாகரன்**
**K.அம்சவேணி குப்புசாமி**

மக்கள் தொடர்பு
**A.ஜெப அருள் ராஜ் - A.ஜான் கார்னல் சிங்**

சட்ட அலோசகர் :
**T.Kஅசோக்குமார்** B.A., B.L.,
**94442 59059**

ஒருங்கிணைப்பு :-
**செந்தில்குமார் மாணிக்கம்**

மாவட்ட வாரியான நிருபர்கள்
B.சௌகத்அலி பாபு, J.பொன்னுராஜம்
S.வின்சென்ட் விஜயகுமார், R.ஆதிமூலம்,
J.ஜானகிராமன், C.கணபதி, D.பிரசன்னா
V.மனோஜ்குமார், மீனா சித்ரா, C.சித்திரவேலு,
R.சரவணன், A.பாலாஜி, D.பிரகாஷ்,
புகழேந்தி கணேசன், மதியழகன், செல்வகுமார்,
அருணாச்சலம், முருகபாண்டி, டாக்டர்.கதிர்வேல்
ரவிசந்திரன், கந்தன், ராதா, சரவணன், ஆனந்த்பாபு,
ராஜேஷ், சங்கர், ராதாகிருஷ்ணன், தினேஷ்குமார்,
சிவக்குமார், வின்சென்ட், பிரகாஷ்குமார்,
விஷ்ணுகுமார், அப்துல் ரஹீம், ஜான்சிராணி

**இதழ் வடிவமைப்பு : சந்துரு எம்**

## தலையங்கம்

இந்திய ஜனநாயகத்திற்கான 2024 - நாடாளுமன்ற தேர்தல முடிவு பலருக்கு அதிர்ச்சி, சிலருக்கு மகிழ்ச்சி மக்கள் தீர்ப்பு - மகேசன் தீர்ப்பு ஏற்றுக் கொள்கிறோம். இந்தியா அடுத்த சில வருடங்கள் எதிர்நோக்கி உள்ள பொருளாதாரம், நிதி போன்றவை உலக அரங்கில் தாக்குப் பிடிக்குமா என்பதை பார்க்க வேண்டும்.

Yearly Subscription - Rs.100/-
3 Years Subscription - Rs.250/-
5 Years Subscription - Rs.400/-

Front Inner - Rs.20,000
Back Inner - Rs.20,000
Outer - Rs.25,000

Black & White Full Page - Rs.6,000
Black & White ½ Page - Rs.2,500
Black & White ¼ Page - Rs.1,500

பொதுமக்கள் & வாசகர்கள் கவனத்திற்கு :
பெண் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்,
சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள்,
குடும்ப நல நீதிமன்ற வழக்குகள்
மற்றும் இலவச ஆலோசனை
தொடர்புக்கு :

**T.Kஅசோக்குமார்** B.A., B.L.,
196, LAW CHAMBER,
High Court, Chennai - 104
**Cell : 72 00 00 14 14**

பெண்களின் படைப்புக்களான கவிதைகள்,
கட்டுரைகள், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள்
விளம்ரபமாக அனுப்பலாம்

- இணை ஆசிரியர்
திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

Owned, Published & Printed by Premavathy Ashokumar, Printed at New Karthik Printers, No.26A, 2nd Street, Bharatheeswarar Colony, Kodambakkam, Chennai - 600 024. and Published from D.No.13/1, Dhayasadan Road, Koyambedu, Chennai-600 107, Editor : Mr. Tamil Selvan




# 2024- நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள்



## 40/40–என சாதித்த திமுக
## 40–ல் 5 பேர் பெண் உறுப்பினர்கள்

## வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் விபரம்

### திருவள்ளூர்(தனி)

காங்கிரஸ் வெற்றி



| | |
|---|---|
| சசிகாந்த் செந்தில் (காங்) | 7,96,956 |
| பொன்.வி.பாலகணபதி (பாஜக) | 2,24,801 |
| கு.நல்லதம்பி (தேமுதிக) | 2,23,904 |
| மு.ஜெகதீஷ் சந்தர் (நாதக) | 1,20,838 |

### மத்திய சென்னை

திமுக வெற்றி



| | |
|---|---|
| தயாநிதி மாறன் (திமுக) | 4,13,848 |
| வினோஜ் பி.செல்வம் (பாஜக) | 1,69,159 |
| பார்த்தசாரதி (தேமுதிக) | 72,016 |
| கார்த்திகேயன் (நாதக) | 46,031 |

### வடசென்னை

திமுக வெற்றி



| | |
|---|---|
| கலாநிதி வீராசாமி - திமுக | 4,96,485 |
| ராயபுரம் மனோ - அதிமுக | 1,57,761 |
| பால்கனகராஜ் - பாஜக | 1,13,085 |
| அமுதினி - நாதக | 95,783 |

### தென் சென்னை

திமுக வெற்றி



| | |
|---|---|
| தமிழச்சி தங்கபாண்டியன் (திமுக) | 5,16,305 |
| தமிழிசை சவுந்தரராஜன் (பாஜக) | 2,90,289 |
| ஜெ.ஜெயவர்தன் (அதிமுக) | 1,72,396 |
| சு.தமிழ்ச்செல்வி (நாதக) | 83,911 |

### ஸ்ரீபெரும்புதூர்

திமுக வெற்றி



| | |
|---|---|
| டி.ஆர்.பாலு (திமுக) | 7,58,611 |
| ஞா.பிரேம்குமார் (அதிமுக) | 2,71,582 |
| வி.என்.வேணுகோபால் (தமாகா) | 2,10,222 |
| வெ.ரவிச்சந்திரன் (நாதக) | 1,40,201 |

### காஞ்சிபுரம்

திமுக வெற்றி



| | |
|---|---|
| க.செல்வம் (திமுக) | 5,86,044 |
| எ.ராஜசேகர் (அதிமுக) | 3,64,571 |
| வெ.ஜோதி (பாமக) | 1,64,931 |
| வி.சந்தோஷ்குமார் (நாதக) | 1,10,272 |

## அரக்கோணம்



**திமுக வெற்றி**

| | |
|---|---|
| எஸ்.ஜெகத்ரட்சகன் (திமுக) | 5,60,578 |
| ஏ.எல்.விஜயன் (அதிமுக) | 2,55,343 |
| கே.பாலு (பாமக) | 2,00,614 |
| ஷா.அப்சியா நஸ்ரின் (நாதக) | 97,985 |

## வேலூர்



**திமுக வெற்றி**

| | |
|---|---|
| கதிர் ஆனந்த் (திமுக) | 5,68,692 |
| ஏ.சி.சண்முகம் (புதிய நீதிக்கட்சி) | 3,52,990 |
| பசுபதி (அதிமுக) | 1,17,682 |
| மகேஷ் ஆனந்த் (நாதக) | 53,284 |

## பொள்ளாச்சி



**திமுக வெற்றி**

| | |
|---|---|
| கே.ஈஸ்வரசாமி (திமுக) | 5,32,763 |
| ஏ.கார்த்திகேயன் (அதிமுக) | 2,81,071 |
| கே.வசந்தராஜன் (பாஜக) | 2,23,179 |
| சுரேஷ்குமார் (நாதக) | 58,116 |

## கரூர்



**காங்கிரஸ் வெற்றி**

| | |
|---|---|
| செ.ஜோதிமணி (காங்கிரஸ்) | 5,34,906 |
| எல்.தங்கவேல் (அதிமுக) | 3,68,090 |
| வி.வி.செந்தில்நாதன் (பாஜக) | 1,02,282 |
| ரெ.கருப்பையா (நாதக) | 87,503 |

## ஆரணி



**திமுக முன்னிலை**

| | |
|---|---|
| தரணி வேந்தன் (திமுக) | 4,96,490 |
| கஜேந்திரன் (அதிமுக) | 2,89,295 |
| கணேஷ்குமார் (பாமக) | 2,34,106 |
| பாக்கியலஷ்மி (நாதக) | 65,895 |

## திருவண்ணாமலை



**திமுக வெற்றி**

| | |
|---|---|
| சி.என்.அண்ணாதுரை (திமுக) | 5,47,379 |
| எம்.கலியபெருமாள் (அதிமுக) | 3,13,448 |
| ஏ.அஸ்வத்தாமன் (பாஜக) | 1,56,650 |
| ஆர்.ரமேஷ்பாபு (நாதக) | 83,869 |

## மயிலாடுதுறை



**காங்கிரஸ் வெற்றி**

| | |
|---|---|
| எம்.சுதா (காங்கிரஸ்) | 5,18,459 |
| பி.பாபு (அதிமுக) | 2,47,276 |
| ஸ்டாலின் (பாமக) | 1,66,271 |
| பி.காளியம்மாள் (நாதக) | 1,27,642 |

## நாகை



**இந்திய கம்யூ. வெற்றி**

| | |
|---|---|
| வை.செல்வராஜ் (இந்திய கம்யூ.) | 4,65,044 |
| ஜி.சுர்சித் சங்கர் (அதிமுக) | 2,56,087 |
| மு.கார்த்திகா (நாதக) | 1,31,294 |
| எம்.ரமேஷ் கோவிந்த் (பாஜக) | 1,02,173 |

## சிவகங்கை



**காங்கிரஸ் வெற்றி**

| | |
|---|---|
| கார்த்தி சிதம்பரம் (காங்கிரஸ்) | 4,27,677 |
| சேவியர்தாஸ் (அதிமுக) | 2,22,013 |
| தேவநாதன் (பாஜக கூட்டணி) | 1,95,788 |
| எழிலரசி (நாதக) | 1,63,412 |

## திண்டுக்கல்



**மார்க்சிஸ்ட் வெற்றி**

| | |
|---|---|
| ஆர்.சச்சிதானந்தம் (மார்க்சிஸ்ட்) | 6,70,502 |
| முகமது முபாரக் (எஸ்டிபிஐ) | 2,26,569 |
| ம.திலகபாமா (பாமக) | 1,12,544 |
| து.கயிலைராஜன் (நாதக) | 97,938 |

## தஞ்சாவூர்



**திமுக வெற்றி**

| | |
|---|---|
| ச.முரசொலி (திமுக) | 5,02,245 |
| பி.சிவநேசன் (தேமுதிக) | 1,82,662 |
| எம்.முருகானந்தம் (பாஜக) | 1,70,613 |
| மு.ஹுமாயூன் கபீர் (நாதக) | 1,20,293 |

## கடலூர்



**காங்கிரஸ் வெற்றி**

| | |
|---|---|
| எம்.கே.விஷ்ணுபிரசாத் (காங்.) | 4,55,053 |
| பி.சிவக்கொழுந்து (தேமுதிக) | 2,69,157 |
| தங்கர்பச்சான் (பாமக) | 2,05,244 |
| வி.மணிவாசகன் (நாதக) | 57,424 |

## நாமக்கல்

திமுக வெற்றி



| | |
|---|---|
| வி.எஸ்.மாதேஸ்வரன் (கொமதேக) | 4,62,036 |
| எஸ்.தமிழ்மணி (அதிமுக) | 4,32,924 |
| கே.பி.ராமலிங்கம் (பாஜக) | 1,04,690 |
| கனிமொழி (நாதக) | 95,577 |

## மதுரை

மார்க்சிஸ்ட் வெற்றி



| | |
|---|---|
| சு.வெங்கடேசன் (மார்க்சிஸ்ட்) | 4,30,323 |
| ராம.சீனிவாசன் (பாஜக) | 2,20,914 |
| பி.சரவணன் (அதிமுக) | 2,04,804 |
| சு.சத்யாதேவி (நாதக) | 92,879 |

## திருச்சி

மதிமுக வெற்றி



| | |
|---|---|
| துரை வைகோ (மதிமுக) | 5,42,213 |
| ப.கருப்பையா (அதிமுக) | 2,29,119 |
| து.ராஜேஷ் (நாதக) | 1,07,458 |
| ப.செந்தில்நாதன் (அமமுக) | 1,00,747 |

## ராமநாதபுரம்

ஐயுஎம்எல் வெற்றி



| | |
|---|---|
| நவாஸ்கனி (ஐயுஎம்எல்) | 5,09,664 |
| ஓ.பன்னீர்செல்வம் (சுயேச்சை) | 3,42,882 |
| ஜெயபெருமாள் (அதிமுக) | 99,780 |
| சந்திரபிரபா (நாதக) | 97,672 |

## தூத்துக்குடி

திமுக வெற்றி



| | |
|---|---|
| கனிமொழி (திமுக) | 5,40,729 |
| ஆர்.சிவசாமி வேலுமணி (அதிமுக) | 1,47,991 |
| எஸ்.டி.ஆர். விஜயசீலன் (தமாகா) | 1,22,380 |
| ஜா.ரொவினா ரூத் ஜேன் (நாதக) | 1,20,300 |

## சிதம்பரம்

விசிக வெற்றி



| | |
|---|---|
| திருமாவளவன் (விசிக) | 5,05,084 |
| எம்.சந்திரகாசன் (அதிமுக) | 4,01,530 |
| பி.கார்த்தியாயினி (பாஜக) | 1,68,493 |
| இரா.ஜான்சிராணி (நாதக) | 65,589 |

## பெரம்பலூர்

திமுக வெற்றி



| | |
|---|---|
| அருண் நேரு (திமுக) | 6,03,209 |
| என்.டி.சந்திரமோகன் (அதிமுக) | 2,14,102 |
| டி.ஆர்.பாரிவேந்தர் (ஐஜேகே) | 1,61,866 |
| இரா.தேன்மொழி (நாதக) | 1,13,092 |

## நீலகிரி

திமுக வெற்றி



| | |
|---|---|
| ஆ.ராசா (திமுக) | 4,72,089 |
| எல்.முருகன் (பாஜக) | 2,31,627 |
| த.லோகேஷ் தமிழ்செல்வன் (அதிமுக) | 2,20,230 |
| ஆர்.ஜெயகுமார் (நாதக) | 58,821 |

## தேனி

திமுக வெற்றி



| | |
|---|---|
| தங்கதமிழ்செல்வன் (திமுக) | 5,71,493 |
| டி.டி.வி.தினகரன் (அமமுக) | 2,92,669 |
| நாராயணசாமி (அதிமுக) | 1,55,587 |
| மதன் (நாதக) | 76,834 |

## கள்ளக்குறிச்சி

திமுக வெற்றி



| | |
|---|---|
| தே.மலையரசன் (திமுக) | 5,61,589 |
| ரா.குமரகுரு (அதிமுக) | 5,07,805 |
| ஜெகதீசன் (நாம் தமிழர்) | 73,652 |
| தேவதாஸ் (பாமக) | 71,290 |

## கன்னியாகுமரி

காங்கிரஸ் வெற்றி



| | |
|---|---|
| விஜய் வசந்த் (காங்கிரஸ்) | 5,46,248 |
| பொன் ராதாகிருஷ்ணன் (பாஜக) | 3,66,341 |
| மரிய ஜெனிபர் (நாதக) | 52,721 |
| பசிலியான் நசரேத் (அதிமுக) | 41,393 |

## கிருஷ்ணகிரி

காங்கிரஸ் வெற்றி



| | |
|---|---|
| கோபிநாத் (காங்கிரஸ்) | 4,92,883 |
| ஜெயபிரகாஷ் (அதிமுக) | 3,00,397 |
| நரசிம்மன் (பாஜக) | 2,14,125 |
| வித்யா ராணி (நாதக) | 1,07,083 |

## புதுச்சேரி

காங்கிரஸ் வெற்றி



| | |
|---|---|
| ஆர்.வைத்திலிங்கம் (காங்கிரஸ்) | 4,26,005 |
| ஏ.நமச்சிவாயம் (பாஜக) | 2,89,489 |
| ஆர்.மேனகா (நாதக) | 39,603 |
| ஜி.தமிழ்வேந்தன் (அதிமுக) | 25,105 |

## கோவை

திமுக வெற்றி



| | |
|---|---|
| கணபதி ப.ராஜ்குமார் ( திமுக) | 5,68,200 |
| கே.அண்ணாமலை (பாஜக) | 4,50,132 |
| சிங்கை ஜி.ராமச்சந்திரன் (அதிமுக) | 2,36,490 |
| கலாமணி ஜெகநாதன் (நாதக) | 82,543 |

## தென்காசி

திமுக வெற்றி



| | |
|---|---|
| ராணி ஸ்ரீகுமார் (திமுக) | 4,25,679 |
| கிருஷ்ணசாமி (அதிமுக) | 2,29,480 |
| ஜான் பாண்டியன் (பாஜக) | 2,08,825 |
| இசை மதிவாணன் (நாதக) | 1,30,335 |

## ஈரோடு

திமுக முன்னிலை



| | |
|---|---|
| கே.இ.பிரகாஷ் (திமுக) | 4,71,232 |
| ஆற்றல் அசோக்குமார் (அதிமுக) | 2,72,882 |
| மு.கார்மேகன் (நாதக) | 70,789 |
| பி.விஜயகுமார் (தமாகா) | 66,986 |

## தருமபுரி

திமுக வெற்றி



| | |
|---|---|
| ஏ.மணி (திமுக) | 4,32,667 |
| சவுமியா அன்புமணி (பாமக) | 4,11,367 |
| ஆர்.அசோகன் (அதிமுக) | 2,93,629 |
| அபிநயா பொன்னிவளவன் (நாதக) | 65,381 |

## திருப்பூர்

இந்திய கம்யூ. வெற்றி



| | |
|---|---|
| சுப்பராயன் (இந்திய கம்யூ.) | 4,72,739 |
| அருணாச்சலம் (அதிமுக) | 3,46,811 |
| ஏ.பி.முருகானந்தம் (பாஜக) | 1,85,322 |
| சீதாலட்சுமி (நாதக) | 95,726 |

## திருநெல்வேலி

காங்கிரஸ் வெற்றி



| | |
|---|---|
| ராபர்ட் புரூஸ் (காங்கிரஸ்) | 5,02,296 |
| நயினார் நாகேந்திரன் (பாஜக) | 3,36,676 |
| ஜான்சி ராணி (அதிமுக) | 89,601 |
| சத்யா (நாதக) | 87,686 |

## விழுப்புரம் (தனி)

விசிக வெற்றி



| | |
|---|---|
| துரை.ரவிக்குமார் (விசிக) | 4,77,033 |
| ஜெ.பாக்கியராஜ் (அதிமுக) | 4,06,330 |
| எஸ்.முரளி சங்கர் (பாமக) | 1,81,882 |
| மு.களஞ்சியம் (நாதக) | 57,242 |

## சேலம்

திமுக முன்னிலை



| | |
|---|---|
| செல்வகணபதி (திமுக) | 5,62,020 |
| விக்னேஷ் (அதிமுக) | 4,92,959 |
| அண்ணாதுரை (பாமக) | 1,25,829 |
| மனோஜ்குமார் (நாதக) | 75,636 |

## விருதுநகர்

காங்கிரஸ் முன்னிலை



| | |
|---|---|
| மாணிக்கம் தாகூர் (காங்) | 3,82,876 |
| விஜயபிரபாகரன் (தேமுதிக) | 3,78,243 |
| ராதிகா (பாஜக) | 1,64,149 |
| கவுசிக் (நாதக) | 76,122 |

வெற்றி பெற்ற
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு
மகளிர் உரிமை வாழ்த்துக்ளை
தெரிவித்துக் கொள்வதோடு
நாடாளுமன்றத்தில்
தமிழக மக்களுக்கான குரல் ஓங்கி ஒலித்து
நமது தார்மீக உரிமைகளை
அற வழியில் பெற்றுத் தருமாறும்
தாழ்மையோடு கோருகிறது.



SJ Susai Raj
Chief Editor - PRO

# 3-முறையாக பிரதமர் மோடி பதவியேற்பு விழா : மோடி உள்பட 72 அமைச்சர்கள் பதவியேற்றனர்..

பிரதமர் மோடி பதவியேற்பு விழா : மோடி உள்பட 72 அமைச்சர்கள் பதவியேற்றனர்.. பதவியேற்பு விழா

டெல்லி: லோக்சபா தேர்தல் முடிவடைந்த நிலையில் மத்தியில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைக்கிறது. இன்று பிரதமராக மோடி பொறுப்பேற்கிறார். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் யாருக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்காத நிலையில் 240 தொகுதிகளில் வெற்றி பெற்ற பாஜக தனது கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து மத்தியில் ஆட்சி அமைக்கிறது.



இன்று முதல் கட்ட அமைச்சரவை பதவியேற்பும் இருக்கும். இன்று கிட்டத்தட்ட 30 அமைச்சர்கள் பதவியேற்பார்கள். பாஜகவிற்கு தனிப்பட்ட மெஜாரிட்டி கிடைக்காத நிலையில் கூட்டணி கட்சிகளுக்கு 18 அமைச்சரவை பதவிகள் வழங்கப்பட உள்ளன. இன்று முழு அமைச்சர்களும் பதவியேற்க மாட்டார்கள். கிட்டத்தட்ட 30 அமைச்சர்கள் பதவியேற்பார்கள். முழு அமைச்சர்களின் பலம் 78 முதல் 81 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3வது முறையாக நாட்டின் பிரதமராக பதவியேற்றுள்ள மோடிக்கு தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தை பாதுகாக்க உண்மையான உணர்வோடு செயல்படுவீர்கள் என நம்புவதாக ஸ்டாலின் ட்வீட் பதிவிட்டுள்ளார்.

தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமர் பொறுப்பேற்று, சரித்திரம் படைத்திருக்கும் பிரதமர் மோடி மற்றும் அவர்களின் புதிய அமைச்சரவையில், மத்திய இணையமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றிருக்கும் அன்பு அண்ணன் எல் முருகன் அவர்களுக்கு, தமிழ்நாடு பாஜக சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

# வெற்றிப் பெற்றாரா விக்ரமன் மகன்?.. படம் எப்படி இருக்கு?

**நடிகர்கள்:** விஜய் கனிஷ்கா, சரத்குமார், கௌதம் மேனன்

**இயக்கம்:** சூர்ய கதிர் & கார்த்திகேயன்

சென்னை: குடும்பங்கள் கொண்டாடும் பல வெற்றிப் படங்களை கொடுத்து ரசிகர்களை குடும்பம் குடும்பமாக தியேட்டருக்கு வரவழைத்த இயக்குநர் விக்ரமன் தனது மகன் விஜய் கனிஷ்காவை ஹீரோவாக ஹிட் லிஸ்ட் படத்தின் மூலம் அறிமுகப்படுத்தி உள்ளார். கே.எஸ். ரவிக்குமார் தயாரிப்பில் உருவாகி உள்ள இந்த படத்தை கே.எஸ். ரவிக்குமாரின் உதவி இயக்குநர்களான சூர்ய கதிர் மற்றும் கார்த்திகேயன் இயக்கி உள்ளனர்.
ஹிட் லிஸ்ட் படத்தில் விஜய் கனிஷ்காவுடன் இணைந்து சரத்குமார், கௌதம் மேனன், ஸ்ம்ருதி வெங்கட், அபி நக்ஷத்ரா, ஐஸ்வர்யா தத்தா, முனீஷ்காந்த், பால சரவணன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.
விஜய் கனிஷ்காவின் அறிமுக படமான ஹிட் லிஸ்ட் திரைப்படம் ஹிட் அடித்ததா? அல்லது பல்பு வாங்கியதா? என்பது குறித்த விரிவான விமர்சனத்தை இங்கே பார்க்கலாம் வாங்க..




**ஹிட் லிஸ்ட் கதை:** யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது என நினைத்து அசைவம் கூட சாப்பிடாமல் ஐடி கம்பெனியில் வேலை செய்து வாழ்ந்து வரும் ஹீரோவின் குடும்பத்தில் உள்ள அம்மாவையும் சகோதரியையும் மாஸ்க் மேன் கடத்திக் கொண்டு செல்கிறான். கடத்தப்பட்ட இருவரையும் வைத்து ஹீரோவை பிளாக்மெயில் செய்து சில கொலைகளை செய்ய வைக்கிறான். அந்த கொலைகளை விசாரிக்க வரும் போலீஸ் அதிகாரியாக சரத்குமார் நடித்துள்ளார். யார் அந்த மாஸ்க் மேன் என்பது கடைசி வரை ட்விஸ்ட்டாக செல்கிறது. ஹீரோவாக அறிமுகமாகியுள்ள விஜய் கனிஷ்கா மாஸ்க் மேன் மற்றும் போலீஸார் என இருவரிடமும் சிக்கித் தவிக்கும் நிலையில், அவர் தனது அம்மாவையும், சகோதரியையும் மீட்டாரா? இல்லையா? என்பது தான் இந்த ஹிட் லிஸ்ட் படத்தின் கதை. படம் எப்படி இருக்கு?: ஹாலிவுட்டில் சில படங்கள் இதே பேட்டர்னில் வந்துள்ளன. ஸ்பைடர் படத்திலும் எஸ்.ஜே. சூர்யா மாஸ்க் மேனாக நடித்திருப்பார். ஜவான் படத்திலும் சில காட்சிகளில் ஷாருக்கான் அப்படி நடித்திருப்பார். ஆனால், இங்கே கடைசி வரை மாஸ்க் மேன் யார் என்பது தான் ட்விஸ்ட்டாகவே உள்ளது. அதிகம் படங்களை பார்க்கும் ரசிகர்கள் அந்த ட்விஸ்ட்டை ஸ்டார் படத்தின் கிளைமேக்ஸ் காட்சியை போலவே ஈஸியாக கணித்து விடுவார்கள். அந்தளவுக்குத்தான் இந்த படத்தை கே.எஸ். ரவிக்குமாரின் உதவி இயக்குநர்கள் இயக்கி உள்ளனர். சாதாரண ஆடியன்ஸ்களுக்கு அந்த ட்விஸ்ட் ஒரு சுவாரஸ்யத்தை நிச்சயம் கொடுக்கும். விக்ரமன் மகன் நடிப்பு எப்படி?: தமிழ் சினிமாவில் வாரிசு நடிகர்கள் நிறைந்து வரும் சூழலில் விஜய்யின் பெயரை வைத்துக் கொண்டு பலர் ஹீரோக்களாக வலம் வரத் தொடங்கியுள்ளனர். விஜய் கனிஷ்கா எனும் பெயருடன் அறிமுகமாகி உள்ள விக்ரமன் மகன் முதல் படத்தில் நடிப்பது போன்று தெரியாத அளவுக்கு இந்த படத்துக்காக நடிப்பு பயிற்சியை எடுத்துக் கொண்டு நடித்துள்ள நிலையில், அவரது நடிப்பு பார்க்கும்படியாக உள்ளது. ஆனால், இன்னமும் நடிப்பில் பல இடங்களில் அவர் கவனம் செலுத்த வேண்டியது முக்கியம்.

**பிளஸ்:** இந்த படத்துக்கு பிளஸ் என்றாலே அது சரத்குமாரின் தேர்ந்த நடிப்பு தான். கதை, திரைக்கதை என அனைத்துமே சுமாராகவே உள்ள நிலையிலும் தனது நடிப்பால் படத்தை தாங்கி நிற்கிறார். முதல் பாதியில் அவருக்கு சண்டைக் காட்சிகள் இல்லை என்றாலும் இரண்டாம் பாதியில் சரத்குமார் போடும் சண்டை அப்ளாஸ் அள்ளுகிறது. சமுத்திரகனி, கௌதம் மேனன், அபி நக் ஷத்ரா உள்ளிட்டோர் தங்களுக்கு கொடுத்த வேலையை செய்துள்ளனர். நீட் பிரச்சனையை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த படம் ஓரளவுக்கு பெட்டராகவே உள்ளது. மைனஸ்: படத்தில் பெரிதாக ரொமான்ஸ் மற்றும் பாடல்கள் இல்லாதது ஆறுதல் தான் என்றாலும் பல இடங்களில் படம் படுத்து விடுவது ரசிகர்களை கடுப்பாகிறது. கிளைமேக்ஸில் அந்த மாஸ்க் மேன் யார் என்பது ரிவீல் ஆகும் இடங்கள் ரசிகர்களை எந்தளவுக்கு ஈர்க்கும் என்பது கேள்விக்குறிதான். விஜய் கனிஷ்கா படத்தை பார்க்க ரசிகர்கள் தியேட்டர்களுக்கு சென்று ஆதரவு அளிப்பார்களா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**மைனஸ்:** படத்தில் பெரிதாக ரொமான்ஸ் மற்றும் பாடல்கள் இல்லாதது ஆறுதல் தான் என்றாலும் பல இடங்களில் படம் படுத்து விடுவது ரசிகர்களை கடுப்பாகிறது. கிளைமேக்ஸில் அந்த மாஸ்க் மேன் யார் என்பது ரிவீல் ஆகும் இடங்கள் ரசிகர்களை எந்தளவுக்கு ஈர்க்கும் என்பது கேள்விக்குறிதான். விஜய் கனிஷ்கா படத்தை பார்க்க ரசிகர்கள் தியேட்டர்களுக்கு சென்று ஆதரவு அளிப்பார்களா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# ஆரோக்கியம் உடற்பயிற்சி

**தினமும் காலையில் உடற்பயிற்சியை இப்படி செய்யுங்கள்.. கிடைக்கும் நன்மைகள் ஏராளம்..!**

தினமும் காலையில் சாலைகளிலும் தெருக்களிலும் சிலர் நடந்து செல்வதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? சிலர் ஜிம்மிற்குச் செல்லும் ஆடைகளை அணிந்துகொள்வார்கள். சிலர் கிரிக்கெட் மற்றும் கால்பந்து சீருடைகள் அணிந்து செல்வார்கள்.. வயதானவர்கள கூட எளிய காலை நடைபயிற்சிக்கு வருகிறார்கள். இந்த குறிப்பிட்ட காட்சி காலையில் அதிகமாக் அபார்க்க முடியும்.. ஏனென்றால் பலர் காலை வேலையை உடற்பயிற்சி செய்யத் தேர்வு செய்கிறார்கள்.

பொதுவாக பலர் காலையில் நடைபயிற்சி செய்வதே ஆரோக்கியம் மற்றும் புத்துணர்ச்சி என்று நினைக்கிறார்கள். அன்று அவர்கள் செய்யும் முதல் காரியம் அது. தினமும் காலையில் வழக்கமான உடற்பயிற்சி செய்யப்படுகிறது, இது மிகவும் ஆரோக்கியமானது. நம் முன்னோர்கள் மக்கள் சூரிய உதயத்திற்கு முன் எழுந்து உடல் ரீதியாக சவாலான சில பயிற்சிகள் அல்லது பணிகளைச் செய்வார்கள். யோகா என்பது வேதங்களிலும் புராணங்களிலும் காலை உடற்பயிற்சி என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் காலை வேலையில் உடற்பயிற்சி செய்தால் கிடைக்கும் நன்மைகள் என்னென்ன என்பது குறித்து இந்த பதிவில் தெரிந்துக் கொள்ளலாம் வாங்க...

தினமும் காலையில் தவறாமல் உடற்பயிற்சி செய்வதால் பல நன்மைகள் கிடைக்கும். அதன் சில நன்மைகள்



உங்களுக்காக கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

**1. புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும் :** காலை உடற்பயிற்சியின் ஒரு முக்கிய நன்மை நாள் முழுவதும் உங்களை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும். காலை உடற்பயிற்சி என்பது நடைபயிற்சி, உடற்பயிற்சி கூடம், நடனம் அல்லது யோகா என எதுவாகவும் இருக்கலாம். காலை உடற்பயிற்சி உடலின் மெட்டபாலிசத்தை அதிகரித்து, நாள் முழுவதும் உங்களை உற்சாகமாக வைத்திருக்கும். காலைப் பயிற்சிகள் உங்களை விழிப்புடனும் புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கும் ஹார்மோன்களைத் தூண்டுகிறது. அதன் பிறகு நீங்கள் சோர்வாகவோ அல்லது தூக்கத்தையோ உணர மாட்டீர்கள். மேலும், காலை உடற்பயிற்சிகள் உங்கள் சருமத்தையும் முகத்தையும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.

**2. ஒழுக்கம்:** காலை உடற்பயிற்சி நம் உடலை ஒழுங்குபடுத்துகிறது. உடலின் செயல்பாடு மற்றும் வழக்கமான முறையில் செயல்பட உதவுகிறது. ஒவ்வொரு நாளும் வழக்கமான உடற்பயிற்சியை செய்வதன் மூலம், உங்கள் உடல் ஒரு பழக்கமாக மாறியவுடன், நீங்கள் உடற்பயிற்சி செய்யாமல் ஒரு நாளையும் ஷ்ருக்க மாட்டீர்கள். மேலும் நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் எழுந்திருப்பீர்கள். ஏனெனில் மூளையின் பழக்கம் மாறிவிடும்.. காலையில் உடற்பயிற்சி செய்வது இரவில் நன்றாக தூங்க உதவும்.

**3. உணவு முறை:** காலையில் தவறாமல் உடற்பயிற்சி செய்பவர்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். காலை உடற்பயிற்சியின் நன்மை என்னவென்றால், உடல் உணவு உட்கொள்ளலை ஒழுங்குபடுத்துகிறது. மேலும், காலையில் உடற்பயிற்சி செய்பவர்கள் ஆரோக்கியமான உணவைத் தேர்ந்தெடுப்பார்கள். உண்ட உணவு நன்கு ஜீரணமாகி, உடலின் செயல்பாடுகள் சரியாகச் செயல்படும். நீங்கள் அஜீரணம் மற்றும் மலச்சிக்கலால் பாதிக்கப்பட்டிருந்தால், காலை உடற்பயிற்சிகள் சிறந்த வழியாக அமையும்.

**4. திட்டமிடல்:** நீங்கள் காலையில் உடற்பயிற்சி செய்யத் தொடங்கிய பிறகு, உங்கள் நாளில் ஒரு அட்டவணையை உருவாக்க வேண்டும். காலை நேரத்தில் உடற்பயிற்சி செய்ய உங்களுக்கு நேரம் இல்லையென்றால், வேறு எந்த நேரத்தையும் நீங்கள் தேர்வு செய்யலாம். எல்லோருக்கும் பிஸியான கால அட்டவணை உள்ளது. மேலும் உடற்பயிற்சிக்கான நேரத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். எனவே, காலை நேரமே பலருக்கு உடற்பயிற்சி செய்ய சிறந்த நேரம். காலையில் எந்த ஆட்சேபனையோ அல்லது திசைதிருப்பலோ இருக்காது.

**5. பலன்கள்:** வெறும் வயிற்றில் உடற்பயிற்சி செய்வது அனைவருக்கும் நல்லது, மேலும் காலை உணவுக்குப் பிறகு உடற்பயிற்சி செய்வதை விட காலை உணவக்கு முன்னே பயிற்சிகள் செய்வது நல்லது.. அது மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். அதிகாலையில் உடற்பயிற்சி செய்வது மிகவும் நல்லது. காலை சூரிய ஒளியில் பிற்பகல் சூரிய ஒளியை விட அதிகமான வைட்டமின்கள் உள்ளன, இவை அனைத்தும் காலை உடற்பயிற்சிகளை சரியானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குகின்றன.

# பொதுமக்களுக்கு ஒரு அறிவிப்பு

தமிழகத்தின் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிய ஒன்றிய பொது மக்களாகிய உங்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்..



1) வீடு கட்டும் போது முறையாக பிளான் வாங்கியும் அல்லது ஆல்டிரேசன் செய்யும் போது மாமுல் கேட்பதும்.

2) புதிய குடிநீர் / கழிவுநீர் இணைப்புக்கு மாமுல் கேட்பதும்.

3) பிளாட்பாரம் கடைகளில் மாமுல் கேட்பதும்.

4) வீடுகளைக் காலி செய்ய ரவுடிகளை அனுப்புவதும்.

5) கட்ட பஞ்சாயத்து செய்து பணம் கேட்பதும்.

இது போன்ற குற்ற செயலில் ஈடுபடும் அதிகாரிகள், வார்டு கவுன்சிலர்கள், அவர்களது கணவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் ரவுடிகள் மாமுல் கேட்டால் அல்லது தொந்தரவு கொடுத்தால் உடனடியாக கீழ்கண்ட எண்களை தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம் யாருக்கும் பயப்பட தேவையில்லை..

முதலமைச்சர் தனி பிரிவு – எண் 044 25672345, 044 25672283

முதலமைச்சர் – எண் +919443146857

தொலைநகல் – எண் 044 25670930, 044 25671441

பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பகிரவும்.



SJ Susai Raj
Chief Editor - PRO

---



திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி (ம) திருவள்ளூர் கிளை சிறைகளில் 06.06.2024 மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தலின்படி அடிப்படை வசதிகள் குறித்து முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி திருமதி.ஜெ.ஜூலியட் புஷ்பா அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர். இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு கூட்டாய்வு மேற்கொண்டார்கள்.

---

விக்கிரவாண்டி தொகுதியில் 10.07.2024- இடைத்தேர்தல் தேர்தல் ஆணையம் அறிவிப்பு மீண்டும் பல்முனைப் போட்டி அரசியல் கட்சிகள் தீவிரம். ஓட்டு, நோட்டு விளையாடுமா ?

---

புதுவை மாநிலம் ரெட்டியார்பாளையம் – புதுநகரில் கழிவு நீர் வீட்டிற்குள் புகுந்து விச வாயு தாக்கி 3 பெண்கள் இறப்பு நீதி விசாரணை வேண்டி அப்பகுதி மக்கள் மற்றும் **மகளிர் உரிமை** வெளியீட்டாளர் **புதுவை அரசுக்கு** வேண்டுகோள்,

## காளானை ஒருமுறை இப்படி குழம்பு செய்யுங்க..

## சிக்கன், மட்டன் குழம்பே தோத்துப்போயிடும்...

காளான் உங்கள் வீட்டில் உள்ளோர் அனைவருக்குமே பிரியமான ஒரு காய்கறியா? அடிக்கடி உங்கள் வீட்டில் காளானை வாங்கி சமைப்பீர்களா? அப்படி சமைக்கும் போது எப்போதும் ஒரே மாதிரி தான் காளானை சமைப்பீர்களா? அப்படியானால் ஒருமுறை காளான் குழம்பிற்கு மசாலாவை அரைத்து செய்து பாருங்கள். இப்படி மசாலா அரைத்து குழம்பு செய்யும் போது, சுவை இன்னும் அற்புதமாக இருக்கும். இந்த குழம்பு சாதம், சப்பாத்தி, பூரி போன்றவற்றுடன் சாப்பிட அட்டகாசமாக இருக்கும்.

உங்களுக்கு காளான் குழம்பை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே காளான் குழம்பு ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள் :** வதக்கி அரைப்பதற்கு... - எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன் - சீரகம் 1 டீஸ்பூன் - சோம்பு 1 டீஸ்பூன் - மிளகு 1 டீஸ்பூன் குழம்பு - சின்ன வெங்காயம் 100 கிராம் - தக்காளி 1 குழம்பிற்கு... - எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன் - பட்டை 2 - கிராம்பு 5 - கல்பாசி சிறிய துண்டு - அன்னாசிப்பூ 1 - பெரிய வெங்காயம் 2 (பொடியாக நறுக்கியது) - தக்காளி 1 (பொடியாக நறுக்கியது) - இஞ்சி பூண்டு பேஸ்ட் 1 டீஸ்பூன் - மிளகாய் தூள் 1 டீஸ்பூன் - மஞ்சள் தூள் 1/2 டீஸ்பூன் - உப்பு தேவையான அளவு - காளான் 200 கிராம் - தண்ணீர் தேவையான அளவு - கொத்தமல்லி - சிறிது



**செய்முறை:** முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் 2 டேபிள் ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும், சீரகம், சோம்பு, மிளகு சேர்த்து பொரிய விட வேண்டும். - பின் அதில் சின்ன வெங்காயத்தை சேர்த்து கண்ணாடி பதத்திற்கு வதக்க வேண்டும். - பின்பு அதில் தக்காளியை சேர்த்து மென்மையாகும் வரை வதக்கி இறக்கி குளிர வைக்க வேண்டும். - பிறகு ஒரு குக்கரை அடுப்பில் வைத்து, அதில் 2 டேபிள் ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும், பட்டை, கிராம்பு, கல்பாசி, அன்னாசிப்பூ சேர்த்து தாளிக்க வேண்டும். - பின் அதில் வெங்காயத்தை சேர்த்து நன்கு வதக்க வேண்டும். - அடுத்து அதில் தக்காளி மற்றும் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து பச்சை வாசனைபோக வதக்க வேண்டும். - அடுத்து மிளகாய் தூள், மஞ்சள் தூள் மற்றும் சுவைக்கேற்ப உப்பு சேர்த்து 2 நிமிடம் கிளறி விட வேண்டும். மீ பின் அரைத்து வைத்துள்ளதை சேர்த்து 2 நிமிடம் கிளறி, குழம்பிற்கு தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கிளறி, குக்கரை மூடி 2 விசில் விட்டு இறக்க வேண்டும். - விசில் போனதும் குக்கரைத் திறந்து, அதில் கொத்தமல்லியைத் தூவினால் சுவையான காளான் குழம்பு தயார்.

# லைட்டா அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க.. அமித்ஷா, ஜேபி நட்டாவை வரவேற்ற சந்திரபாபு நாயுடுவுக்கு நடந்த பரிதாபம்

அமராவதி : மத்தியில் பாஜக 3வது முறையாக ஆட்சியமைக்க உதவி செய்த தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரான சந்திரபாபு நாயுடு இன்று 4வது முறையாக ஆந்திர முதல்வராக பதவியேற்க உள்ளார். பதவியேற்பு விழாவில் பங்கேற்க வந்த அமித்ஷா, ஜேபி நட்டாவை சந்திரபாபு நாயுடு வரவேற்றார். இந்த வேளையில் பாஜக தலைவர்கள் செய்த செயல் தெலுங்கு தேசம் கட்சியினரை கவலைக்குள்ளாக்கி உள்ளது.

ஆந்திரா சட்டசபை தேர்தலில் மும்முனை போட்டி நிலவியது. இதில் ஆளும் கட்சியாக இருந்த முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியின் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் + கம்யூனிஸ்ட் கூட்டணியை வீழ்த்தி சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் + நடிகர் பவன் கல்யாணின் ஜனசேனா + பாஜக கூட்டணி அமோக வெற்றி பெற்றது.



இதில் தெலுங்கு தேசம் கட்சி 135 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்றது. பவன்கல்யாணின் ஜனசேனா கட்சி 21 இடங்களிலும், பாஜக 8 இடங்களிலும் வெற்றி பெற்றது. மொத்தமாக இந்த கூட்டணி 164 இடங்களை கைப்பற்றியது. மாறாக ஆளும் கட்சியாக இருந்த ஜெகன் மோகன் ரெட்டியின் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் 11 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இதையடுத்து இன்று காலை 11.27 மணிக்கு ஆந்திர முதல்வராக பதவியேற்க உள்ளார். இந்த பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர். இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாஜகவின் தேசிய தலைவரும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சருமான ஜேபி நட்டா உள்பட பலர் பங்கேற்க உள்ளனர்.

இந்த பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக நேற்று இரவே அமித்ஷா, ஜேபி நட்டா ஆகியோர் விஜயவாடா சென்றார். விஜயவாடாவில் அவர்கள் 2 பேரையும் சந்திரபாபு நாயுடு வாசலில் நின்று வரவேற்றார். அப்போது முதலில் அமித்ஷா காரில் இருந்து இறங்கினார். அவரிடம் சந்திரபாபு நாயுடு கைக்குலுக்கி வரவேற்றார். இதையடுத்து அமித்ஷா சிவப்பு நிற மலர்களால் ஆனா பூங்கொத்தை சந்திரபாபு நாயுடுவுக்கு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

அதன்பிறகு இந்த பூங்கொத்தை அங்கிருந்த பாதுகாவலர்கள் வாங்கி அமித்ஷா வந்த காரிலேயே வைக்க முயன்றார். இந்த வேளையில் ஜேபி நட்டாவும் காரில் அங்கு வந்தார். அவரிடமும் கைக்குலுக்கி சந்திரபாபு நாயுடு வரவேற்றார். அப்போது ஜேபி நட்டாவிடம் பூங்கொத்து இல்லை. இதனை கவனித்த அமித்ஷா உடனடியாக ஜேபி நட்டாவின் கையை லேசாக தட்டி தான் வழங்கிய அதே பூங்கொத்தை வழங்கும்படி சிக்னல் செய்தார். அதற்கு ஏற்ப பாதுகாவலர்களும் அமித்ஷா வழங்கிய பூங்கொத்தை ஜேபி நட்டாவிடம் வழங்கினார். அதனை ஜேபி நட்டா, சந்திரபாபு நாயுடுவுக்கு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்த வீடியோ தற்போது இணையதளத்தில் பரவி வருகிறது. இதனை பார்க்கும் எதிர்க்கட்சியினர் விமர்சிக்க தொடங்கி உள்ளனர். மத்தியில் ஆட்சியில் அமர 16 எம்பிக்களின் ஆதரவை தந்துள்ள நரேந்திர மோடியை 3வது முறையாக பிரதமராக்கி பாஜகவை ஹாட்ரிக் முறையில் மத்தியில் ஆட்சியில் அமர செய்த சந்திரபாபு நாயுடுக்கு பூங்கொத்து கூட தனித்தனியே பாஜக தலைவர்கள் வாங்க மாட்டார்களா? என்று கேள்வி எழுப்பி உள்ளனர்.

# நான் என்ன மோடியா? பரமாத்மாவால் அனுப்பி வைக்கப்பட்டவனா? வயநாட்டில் விளாசிய ராகுல்!

வயநாடு: வயநாடு அல்லது ரேபரேலி எந்த தொகுதியின் எம்பியாக நீடிப்பது என்பது குறித்து மக்களிடம் ஆலோசித்து முடிவெடுப்பேன்; நான் மோடியைப் போல பரமாத்மா கிடையாது என மூத்த காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக சாடியிருக்கிறார்

லோக்சபா தேர்தலில் கேரளாவின் வயநாடு தொகுதியில் 2-வது முறையாக போட்டியிட்ட ராகுல் காந்தி 3,64,422 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றார். அதேபோல உ.பி.யின் ரேபரேலி லோக்சபா தொகுதியில் முதல் முறையாக வெற்றி பெற்றார். ரேபரேலி தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தி, 390030 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.



இதனையடுத்து ராகுல் காந்தி எந்த தொகுதியை தக்க வைத்துக் கொண்டு எம்பியாக நீடிப்பார்? என்கிற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ராகுல் காந்தி ராஜினாமா செய்யப் போகும் லோக்சபா தொகுதியில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி களமிறக்கப்படலாம் என்பதும் ஆரூட தகவல்கள். இந்த நிலையில் வயநாடு லோக்சபா தொகுதிக்கு ராகுல் காந்தி வருகை தந்து தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார். வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியதாவது: நான் வெற்றி பெற்ற வயநாடு, ரேபரேலி இரு தொகுதி மக்களுமே மகிழ்ச்சி அடையும் வகையில் முடிவெடுப்போம். வயநாடு அல்லது ரேபரேலி எம்பியாக நீடிப்பது குறித்து மக்களுடன் ஆலோசித்துவிட்டுதான் முடிவெடுப்போம்.

பிரதமர் மோடி தமக்கு பரமாத்மா வழிகாட்டுவதாக சொல்கிறார். ஆனால் நான் ஒரு சாமானியன். சாதாரண மனிதன். எனக்கு பரமாத்மா எல்லாமே என் மக்கள்தான். ஆகையால் எங்கள் மக்கள் என்ன முடிவெடுக்கிறார்களோ அதை ஏற்றுக் கொண்டு கட்டுப்பட்டு செயல்படுவேன்.

லோக்சபா தேர்தலுக்கு முன்னர் நாட்டின் அரசியல் சாசனத்தையே மாற்றுவோம் என பாஜக தலைவர்கள் பேசினர். ஆனால் லோக்சபா தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பிரதமர் மோடியே அரசியல் சாசனத்தை தொட்டு வணங்குகிறார். அரசியல் சாசனப் புத்தகத்தின் முன்பாக மண்டியிட்டு வணங்கினார் மோடி. ஆம் மக்கள் இந்த நாட்டில் வெறுப்பை விதைத்த சக்திகளை தேர்தலில் தோற்கடித்துவிட்டனர். இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

# தனிப்பெரும்பான்மை பெறாத நிலையில் 5 ஆண்டுகள் ஆட்சி நீடிக்குமா? பிரதமர் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள்

சந்திரபாபு நாயுடு மற்றும் நிதிஷ் குமார் ஆகியோர் தங்களுக்கு வேண்டிய இலாகாக்களை பெற்றுக் கொண்டுள்ளனர், இது பாஜகவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் முடிந்தவரை நிதிஷ் குமார், சந்திரபாபு நாயுடுவை சமாளித்து அவர்களின் பெரும்பாலான கோரிக்கையை நிறைவேற்றுவதாக மத்தியில் ஆட்சி அமைக்கவும், அதன்பிறகு அவர்கள் தொல்லை அளித்தால் இருவரில் ஒருவரை பாஜக கழற்றி விடலாம் எனவும் கூறப்படுகிறது. அதாவது தற்போது பாஜக கூட்டணிக்கு மொத்தம் 294 எம்பிக்கள் உள்ளன. இதில் பாஜகவை சேர்ந்தவர்கள் 240 பேர். சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சிக்கு 16 எம்பிக்களும், நிதிஷ் குமாரின் ஜேடியூ கட்சிக்கு 12 எம்பிக்களும் உள்ளனர். அதேபோல்



மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டேக்கு 7 எம்பிக்கள் உள்ளனர். லோக்ஜன்சக்தி கட்சிக்கு 5, கர்நாடகா முன்னாள் முதல்வர் குமாரசாமியின் ஜேடிஎஸ், ராஷ்ட்ரிய ஜனதாதளம், நடிகர் பவன் கல்யாணின் ஜனசேனா உள்ளிட்ட கட்சிகளுக்கு தலா 2 எம்பிக்கள் உள்பட பிற சிறு கட்சிகளுக்கு 6 எம்பிக்கள் உள்ளன. அதன்படி பார்த்தால் நிதிஷ் குமார் தொல்லை கொடுத்து கூட்டணியில் இருந்து தனது 12 எம்பிக்களுடன் வெளியேறினாலும் கூட 282 எம்பிக்கள் இருப்பார்கள். அதேபோல் சந்திரபாபு நாயுடுவும் ஏதாவது பிரச்சனை செய்து கூட்டணியில் இருந்து தனது 16 எம்பிக்களுடன் வெளியேறினாலும் 278 எம்பிக்களுடன் மத்தியில் பாஜக ஆட்சியை தொடர முடியும். மேலும் தற்போதைய தேர்தலில் சுயேச்சைகளாக போட்டியிட்டு 7 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களிடமும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசி வருகிறார். இவர்கள் பிரதமர் மோடியின் மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களை பாஜகவில் இணைத்து பாஜக எம்பியாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது நடக்கும் பட்சத்தில் பாஜகவுக்கு கூடுதலாக 7 எம்பிக்கள் கிடைப்பார்கள். இது இக்கட்டான சூழலில் பாஜகவுக்கு கைகொடுக்கும் என பாஜக திட்டமிட்டுள்ளது.

மோடி அரசுக்கு சநத்ரி பாபு நாயடு மற்றும் நிதிஷ்குமார் ஆதரவு இல்லாமல் வேறு சில கட்சிகளும் மறைமுக ஆதரவு சில எம்.பி.க்கள் ஆதரவு தர தயாராக உள்ளதாக தகவல்கள் கசிந்து வருகிறது.

---

# சிறுசெய்திகள்

ராணுவ தலைமைத் தளபதியாக உபேந்திர திவேதி நியமனம். இந்திய ராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியாக உபேந்திர திவேதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜூன் 30ஆம் தேதி உபேந்திர திவேதி தலைமைத் தளபதியாக பொறுப்பேற்பார் எனத் தகவல். தலைமைத் தளபதி மனோஜ் பாண்டேவின் பதவிக்காலம் ஜூன் 30இல் முடிவதால் உபேந்திர திவேதி பொறுப்பேற்பு.

------------------------------------------

தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையத்தில் விமானத்தில் ஏன் தமிழில் அறிவிப்பு வெளியிட கூடாதா என சென்னை உயர்நீதிமன்றம் மத்திய அரசுக்கு கேள்வி

# ஆந்திரா:சந்திரபாபு பதவியேற்பு விழா மேடை முன்வரிசையில் ரஜினிக்கு இடம்.. நடிகை ரோஜா பேச்சே காரணம்!

விஜயவாடா: ஆந்திரா முதல்வராக சந்திரபாபு நாயுடு பதவியேற்ற விழா மேடையில் நடிகர் ரஜினிகாந்துக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டு முக்கியத்தும் தரப்பட்டிருந்தது பேசுபொருளாகி இருக்கிறது.

நடிகர் ரஜினிகாந்த், தமிழ்நாட்டின் சூப்பர் ஸ்டார். தமிழ்நாட்டு அரசியலிலும் களமிறங்க முயற்சித்து தனிக்கட்சி அறிவிப்பு எல்லாம் வெளியிட்டு பின்னர் அந்த முடிவை கைவிட்டார். தமிழ்நாட்டில் 1996 தேர்தலில் ரஜினிகாந்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அதன் பின்னர் ரஜினிகாந்தின் கருத்துகள் தமிழக அரசியல் களத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தது.

என்டிஆர் விழா: நடிகர் ரஜினிகாந்துக்கு ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களிலும் ரசிகர்கள் உள்ளனர். ஆந்திராவில் கடந்த ஆண்டு என்டி ராமாராவ் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இதனை ஏற்பாடு செய்திருந்தவர் அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சந்திரபாபு நாயுடுதான். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் நடிகர் ரஜினிகாந்த். ரஜினிகாந்த் புகழாரம்: இந்த நிகழ்ச்சியில் பேசிய ரஜினிகாந்த், சந்திரபாபு நாயுடுவை ஆஹோ ஓஹோவென புகழ்ந்து தள்ளிவிட்டார். தம்முடைய 'அரசியல்' அறிவு வளருவதற்கு காரணமே சந்திரபாபு நாயுடுவுடனான சந்திப்புகள்தான். இந்திய அரசியல், ஆந்திரா அரசியல் மட்டுமல்ல சர்வதேச அரசியலிலும் ரொம்பவே பிடிப்புள்ளவர் சந்திரபாபு நாயுடு. அவர் ஒரு தீர்க்கதரிசி. அதனால்தான் ஹைதராபத்தை ஹை டெக் சிட்டியாக அன்றே உருமாற்றியவர் என பேசினார் ரஜினிகாந்த்.

நடிகை ரோஜா ஆவேசம்: அப்போது ஆட்சியில் இருந்த ஜெகன் மோகன் அரசுக்கு ரஜினிகாந்தின் இந்த பேச்சு கடும் அதிருப்தியைக் கொடுத்தது. இதனால் அமைச்சராக இருந்த நடிகை ரோஜா, ரஜினிகாந்தை கடுமையாக விமர்சித்தார். அரசியலை விட்டு ஒதுங்கிப் போவதாக அறிவித்துவிட்டு ஆந்திராவில் பாலிட்டிக்ஸ் பேசுகிறார் ரஜினிகாந்த். இது தேவையில்லாதது. தெலுங்கு பேசும் மக்கள் ரஜினிகாந்தை மன்னிக்கவே மாட்டார்கள். சந்திரபாபு நாயுடுதான் என்டிஆருக்கே துரோகம் செய்தவர். அவரை போய் எப்படி புகழலாம் எனவும் கொந்தளித்தார் நடிகை ரோஜா. சீறிய சந்திரபாபு



நாயுடு: இதற்கு சந்திரபாபு கடுமையாக பதிலடி கொடுத்து அறிக்கை வெளியிட்டார். நடிகர் ரஜினிகாந்தை இப்படி எல்லாம் விமர்சிப்பதை தெலுங்கு மொழி பேசும் மக்கள் ஒரு போதும் ஏற்கவேமாட்டார்கள் என கூறியிருந்தார்.

சந்திரபாபு கைதால் ரஜினி கோபம்: பின்னர் ஜெகன் மோகன் ரெட்டி அரசால் சந்திரபாபு நாயுடு கைது செய்யபட்டபோதும் ரஜினிகாந்த் கண்டனக் குரல் எழுப்பினார். சந்திரபாபு நாயுடு அப்படி எல்லாம் தப்பு செய்யக் கூடியவரே அல்ல என கூறிய ரஜினிகாந்த் தற்போது அமைச்சராகி இருக்கும் சந்திரபாபு மகன் நாரா லோகேஷிடம் தொடர்பு கொண்டு ஆறுதலும் கூறினார். சந்திரபாபு நாயுடுவை சிறையில் சந்தித்து பேசவும் ரஜினிகாந்த் திட்டமிட்டிருந்தார்.

களமிறக்கப்பட்ட ரஜினிகாந்த்: இவ்வளவு பெரிய பின்னணியில் லோக்சபா தேர்தலில் சந்திரபாபு நாயுடு கிங் மேக்கரான போது ரஜினிகாந்த் மகிழ்ச்சி அடையாமலா இருப்பார்? அத்துடன் டெல்லி பாஜக மேலிடமே ரஜினிகாந்தை தொடர்பு கொண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான ஆதரவு உத்தரவாதத்தை சந்திரபாபு நாயுடுவிடம் இருந்து அழுத்தம் திருத்தமாக பெற்றுத்தரவும் சொன்னது. இதனை நாமும் முன்னரே எழுதி இருந்தோம். இதனால் ரஜினிகாந்தும் டெல்லி சென்று திரைமறைவு அரசியல் நகர்வுகளில் இணைந்திருந்தார். ரஜினிக்கு சிறப்பு: இதன் அடுத்த கட்டமாகவே இன்று ஆந்திரா முதல்வராக சந்திரபாபு நாயுடு பதவியேற்ற போது ரஜினிகாந்துடனான 30 ஆண்டுகால நட்பின் உச்சமாக, பதவியேற்பு விழா மேடையில் முதல் வரிசையிலேயே இடம் ஒதுக்கி சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

# மத்திய அமைச்சரவையில் சில சுவாரஸ்யங்கள்...

கேரளாவிற்கு இரண்டு இடம் கொடுத்துள்ளார்கள். ஒன்று நடிகர் சுரேஷ் கோபி... இன்னொருவர் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த ஜார்ஜ் குரியனுக்கு அமைச்சரவையில் இடம் கிடைத்துள்ளது. (இனிதான் அவர் மாநிலங்களவைக்கு எம்.பி.யாக தேர்வாகப் போகிறார்.) அவர் கிறிஸ்துவ மக்களின் பிரதிநிதியாக இருப்பார். மிகுந்த அரசியல் அனுபவுள்ளவர்!

தமிழகத்திலிருந்து பாஜக சார்பாக யாரும் வெற்றி பெறவில்லை என்றாலும் கூட நிர்மலா சீத்தாராமன், ஜெயசங்கர் மற்றும் எல் முருகனுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்துள்ளார்கள்.

உத்திரபிரதேசத்தில் போதிய அளவு வெற்றி பெறாவிட்டாலும் கூட அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது! மூன்று முறை வாரணாசி மிர்ஷாப்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற அப்னா தளம் கட்சியின் ஒரே ஒரு எம்பி ஆன அனுப்பிரியா பட்டேலுக்கும் இந்த முறையும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. அவர் ஏற்கனவே ராஜாங்கத் துறை மந்திரியாக இருந்தார்.

புதிய நாடாளுமன்ற அமைச்சரவையில் ஏழு பெண்கள் இடம் பெறுகிறார்கள்!

முறையே நிர்மலா சீதாராமன் அன்னபூர்ணா தேவி இருவரும் கேபினட் அந்தஸ்து பெறுகிறார்கள்!

அனுப்பிரியா பட்டேல், ஷோபா கரந்தலாஜே, ரச்சா நிகில் கட்சே, சாவித்திரி தாகுர், நிமுபென் பாமினியா ஆகிய ஐவரும் இணை அமைச்சர்களாக பதவி ஏற்கிறார்கள்.

இந்த மத்திய நாடாளுமன்ற அமைச்சரவையில் மூத்த அமைச்சர்கள் 18 பேர் இடம் பெற்று இருப்பதோடு புதிய முகங்கள் 33 பேர்கள் இடம் பிடித்துள்ளனர் என்பது புதிய இளம் தலைமுறைக்கான தேர்வாக இருக்கிறது.

அமைச்சரவையில் 30 பேர் கேபினட் அமைச்சர்களாகவும். ஐந்து பேர் தனி பொறுப்புள்ள அமைச்சர்களாகவும் 36 பேர்கள் இணை அமைச்சர்களாகவும் பதவி ஏற்கிறார்கள்.

இதன்படி உத்தரப்பிரதேசத்தில் இருந்து 10 பேர்! பீகாரில் இருந்து எட்டு பேர்! மகாராஷ்டிராவில் இருந்து 6 பேர்! மத்திய பிரதேசம் குஜராத் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களிலிருந்தும் தலா ஐந்து பேர் அமைச்சர்களாக இடம் பெறுகிறார்கள்.

மேலும் ராஜஸ்தான் ஜார்கண்ட் இரண்டிலிருந்தும் தலா நான்கு பேர்! ஒடிசா ஹரியானா மற்றும் ஆந்திராவில் இருந்து தலா மூன்று பேர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

தெலுங்கானா, அஸ்ஸாம், கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு ஜம்மு காஷ்மீர் கோவா பஞ்சாப் உத்தரகாண்ட் இமாச்சல் அருணாச்சல் ஆகிய மாநிலங்களில் இருந்து இந்த நாடாளுமன்ற அமைச்சரவையில் இடம் பெறுகிறார்கள்.

இந்திய தேசிய முழுமைக்கும் ஆன பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் கவனமான அமைச்சரவைத் தேர்வு நடந்திருக்கிறது! கூட்டணி கட்சிகளுக்கும் இன்னும் சிலருக்கும் அதில் பங்களிக்கப்பட்டு இருப்பது மிகச் சிறந்த சமத்துவ நோக்கமாக இருக்கிறது! புதிய நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு மனமார்ந்த நல் வாழ்த்துகள்!!

---

# சிறுசெய்திகள்

ஜுன் 24-ஆம் தேதி 18-வது முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற உள்ளது

-------------------------------------------

ஜுன் 15-ஆம் தேதி மக்களுடன் முதலமைச்சர் திட்டம் தொடங்க தமிழக அரசு திட்டம்

# தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைச்சரவையில் இலாகாக்கள்:

- ராஜ்நாத் சிங் – பாதுகாப்பு
- அமித்ஷா – உள்துறை
- ஜே.பி.நட்டா – சுகாதாரம், ரசாயனங்கள்
- சிவ்ராஜ் சிங் சவுஹான் – வேளாண், ஊரக வளர்ச்சி
- மனோகர் லால் கட்டார் – மின்சாரம், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி
- நிர்மலா சீதாராமன் – நிதி
- ஜெய்ஷங்கர் – வெளியுறவு
- அஷ்வினி வைஷ்ணவ் – ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் ஐடி
- மன்சுக் மாண்ட்வியா – தொழிலாளர் நலன், இளைஞர் நலன், விளையாட்டு
- ஹர்தீப் சிங் புரி – பெட்ரோலியம், இயற்கை எரிவாயு
- ஜித்தன் ராம் மஞ்சி – சிறு குறு நடுத்தர தொழில்கள்
- தர்மேந்திர பிரதான் – கல்வி
- குமாரசாமி – இரும்பு, கனரக தொழில்கள்
- ராம்மோகன் ராயுடு – விமான போக்குவரத்து
- பியூஷ் கோயல் – வணிகம் மற்றும் தொழில்துறை
- ராஜீவ் ரஞ்சன் சிங் – பஞ்சாயத்து ராஜ், மீன்வளம், கால்நடை, பால்வளம்
- சர்பானந்த சோனோவால் – கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், நீர்வழிகள்
- வீரேந்திர குமார் – சமூக நீதி
- அன்னபூர்ண தேவி – மகளிர், குழந்தைகள் மேம்பாடு
- கிரண் ரிஜிஜு – நாடாளுமன்ற விவகாரங்கள், சிறுபான்மையினர் நலன்
- சி.ஆர்.பாட்டீல் – ஜல் சக்தி
- ப்ரகலாத் ஜோஷி – நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொதுவிநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி
- கிரிராஜ் சிங் – ஜவுளி
- ஜுவல் ஓரம் – பழங்குடியினர் நல விவகாரம்
- ஜோதிர்த்தியா சிந்தியா – கம்யூனிகேஷன், வடகிழக்கு நலன்
- பூபேந்தர் யாதவ் – சுற்றுச்சூழல், வனம்
- கஜேந்திர சிங் ஷெகாவத் – கலாச்சாரம் மற்றும் சுற்றுலா
- கிஷன் ரெட்டி – நிலக்கரி மற்றும் சுரங்கங்கள்
- சிராஜ் பஸ்வான் – உணவு பதப்படுத்தும் தொழில்கள்


# BHARATHANATYAM CLASSES



**Both Online and Offline Classes available**

Separate batch for

**KIDS / ADULTS / WORKING WOMEN**

by

**ACHARYA**

12A, West Avenue Road, Kodambakkam ,Chennai 600024.
Monika Damodaran - 9940418228 Mala - 9940490247

STEPS FOR SURVIVAL

# CANCER AWARENESS RUN

**நாம் அனைவரும் இணைந்து ஒரு முக்கியமான செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்லப் போகிறோம். இது கைவிட முடியாத, உத்வேகம் மிகுந்த ஒரு நிகழ்ச்சி. நாம் மகிழ்ச்சியுடன் அறிவிப்பது,** STEPS FOR SURVIVAL (CANCER AWARENESS RUN) **16 ஜூன் 2024 அன்று பெசன்நகர் கடற்கரையில் நடைபெறவுள்ளது.**

## தேதி : 16 ஜூன் 2024 இடம்: பெசன்நகர் கடற்கரை

## நேரம்: காலை 4 மணி முதல் 7 மணி வரை

### பதிவு கட்டணம் :
### பொதுப் பதிவுகள்: ரூ. 500
### பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு: 50% தள்ளுபடி

**நிகழ்வின் நோக்கம்:**

இந்த ஓட்டம் மாரத்தான் நிகழ்வு மட்டுமல்ல; இது கேன்சர் நோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது.

கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தமது குடும்பங்களுடன் சேர்ந்து வெற்றிகரமாக வாழ உதவுவதே இந்த நிகழ்வின் முக்கிய இலக்கு.



இவ்விழா பற்றி உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் தெரியப்படுத்துங்கள்.

நாம் அனைவரும் இணைந்து கேன்சருக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி காண உறுதியாய் முன்னேறுவோம்.

சரிவரை நகரும் ஒரு அடி கேன்சர் விழிப்புணர்வு ஓட்டத்தில் நமது கால் அடியுங்கள்!

நீங்கள் இந்த ஓட்டத்தில் பங்கேற்பதன் மூலம், கேன்சர் நோயாளிகளின் உழைப்பிற்கு ஆதரவாக உங்கள் ஆதரவைத் தெரிவிக்கின்றீர்கள்.

உங்கள் ஒவ்வொரு அடியும் கேன்சர் நோயாளிகளின் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கையை வழங்கும்.

அனைவரும் கலந்து கொண்டு, 'சரிவரை நோக்கி நகரும் அடி' என்னும் இந்த விழிப்புணர்வு ஓட்டத்தை சிறப்பாக மாற்றுவோம்.

**மேலும் தகவலுக்கு:**

தொடர்புகளுக்கு, பதிவு செய்ய மற்றும் விவரங்கள் அறிய எங்கள் இணையதளத்தைப் பார்வையிடுங்கள்.


பங்கேற்பதற்கான தொடர்புக்கு மொபைல் எண் : **8189 995454**

மின்னஞ்சல்: fizzeventman@gmail.com




# விண்மீன் அகாடமி சார்பில் வில்லிவாக்கம் RCM பள்ளியில் டேபிள் டென்னிஸ் வீரர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது

